ZURICH

***இணைப்பு 1***
**கேள்விகள்-பதில்கள் (FAQs)**

| இரண்டாம் மருத்துவ அட்டை உறுதியான ஒப்புதல் பிரச்சாரம் குறித்த கேள்வி-பதில் (FAQ) | | |
|---|---|---|
| **எண்** | **கேள்விகள்** | **பதில்கள்** |
| 1. | ***இரண்டாம் மருத்துவ அட்டையின் உறுதியான ஒப்புதல் (GA) பிரச்சாரம் என்பது என்ன??*** | *இந்தப் பிரச்சாரம், தற்போதைய மருத்துவத் திட்டத்தின் வருடாந்திர வரம்பு குறைந்துள்ள வாடிக்கையாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இது "இரண்டாம் மருத்துவ அட்டை" எனும் பெயரில் விளங்குகிறது– அதிகபட்சம் RM3 மில்லியன் வரையிலான வருடாந்திர வரம்புடன் கூடுதலான மருத்துவத் திட்டங்கள் மற்றும் உங்கள் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறான கொள்கை விதிகளுடன் வழங்குகிறது.*<br><br>*நீங்கள் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்டை, இரண்டாம் மருத்துவ அட்டையாக அல்லது மருத்துவ மதிப்பீடு மற்றும் காத்திருப்புக் காலம் இல்லாமல் வாங்கலாம்.* |
| 2. | ***இந்தப் பிரச்சாரம் குறுகிய காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுமா?*** | *ஆம். இது ஒரு குறிப்பிட்ட காலச் சலுகையாகும், இது இப்போதிருந்து 29 ஜூன் 2026 வரை மட்டுமே கிடைக்கும். இந்த பிரத்யேகச் சலுகையைப் பெற, விண்ணப்பங்கள் 30 ஜூலை 2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அங்கீகரிக்கப்பட வேண்டும்.* |
| 3. | ***இந்தப் பிரச்சாரம் எனக்கு எவ்வாறான நன்மை அளிக்கும்;அதோடு சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் எவ்வாறான அம்சங்களைக் கொண்டுள்ளன?*** | *இந்தப் பிரச்சாரம், உங்கள் மருத்துவ பாதுகாப்பை மேம்படுத்த எளிய வழியை வழங்குவதுடன், அதிகத் தகுதி மற்றும் நீண்டகால மனஅமைதியையும் தருகிறது. தற்போதும் எதிர்காலத்திலும் உங்கள் சுகாதாரத் தேவைகளை ஆதரிக்க வடிவமைக்கப்பட்ட பல அம்சங்களையும் கொண்டுள்ளது.*<br><br>***முக்கிய அம்சங்கள் :***<br>*• மருத்துவ மதிப்பீடு இல்லாமல்* ***உறுதியான ஒப்புதல் (GA)****, உங்கள் பாதுகாப்பை எளிதாக மேம்படுத்த உதவும்.*<br>***• முழுமையான மருத்துவக் காப்பீட்டில்*** *உள்ளவை:*<br>*- உயர்ந்த வருடாந்திர வரம்பு;*<br>*- வரையற்ற வாழ்நாள் வரம்பு;*<br>*- மேம்பட்ட அறை மற்றும் உணவு வசதிகள்*<br>*• உங்கள் மருத்துவப் பாதுகாப்பை முழுமையாக வலுப்படுத்தவும் புத்திசாலித்தனமாகப் பராமரிக்கவும்* ***உயர் கழிவு தொகை*** *உதவும்.*<br>***• காத்திருப்புக் காலத்தைத்*** *தவிர்ப்பதால், உங்கள் புதிய மருத்துவக் காப்பீடு உடனடியாகத் தொடங்கும்.*<br>*• உங்கள் இரண்டாம் மருத்துவ அட்டையில்* ***முன்பிருந்த உடல்நிலை நோய்களுக்கான பாதுகாப்பு****.*<br>*• அதிகபட்சம்* ***20% வரை கோரிக்கை இல்லாத தள்ளுபடி (NCD),*** *உங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கோரிக்கை இல்லாத காலத்தையும் வழங்குகிறது.*<br><br>*மேலும் தகவலுக்கு, தயவுசெய்து உங்கள் நிதித் திட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும்.* |
| 4. | ***இந்தச் சலுகையை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்ளலாம்?*** | *இந்தச் சலுகையை ஏற்றுக்கொள்ள, சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் மருத்துவ ரைடருடன் புதிய சூரிச் வேல்யுலைஃப் திட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும், உங்கள் சலுகைக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள பதில் சீட்டினைப் பூர்த்தி செய்து, 29 ஜூன் 2026 ஆம் தேதிக்குள் எங்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.* |

| சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் மற்றும் இந்தப் பிரச்சாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் குறித்த கேள்வி-பதில் (FAQ) | | |
|---|---|---|
| **எண்** | **கேள்விகள்** | **பதில்கள்** |
| 5. | ***புதிய காப்பீட்டிற்கு நான் பதிவு செய்ய வேண்டுமா?*** | *ஆம். இந்தப் பிரச்சாரத்தில் பங்கேற்க, நீங்கள் புதிய காப்பீட்டிற்குப் பதிவு செய்யவேண்டும். சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் என்பது ஒரு மருத்துவ ரைடர் ஆகும்; அதாவது இது அடிப்படை காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும்.* |

| | | |
|---|---|---|
| | | பிரச்சாரத்தில் பங்கேற்க, **RM20,000 அடிப்படை காப்பீட்டுத் தொகையுடன் புதிய** சூரிச் வேல்யுலைஃப் திட்டத்தில் பதிவு செய்து, சூரிச் இன்ஃபினிட்கேர் ஷில்ட் **மருத்துவ ரைடரை** இணைக்கவும். இதனால் உங்கள் மருத்துவக் காப்பீடு மேம்படுத்தப்படும். |
| 6. | **இந்த பிரச்சாரத்திற்கு நான் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்டின் கீழ் எந்தத் திட்டத்தையும் தேர்ந்தெடுக்க முடியுமா?** | உங்கள் சலுகைக் கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தைப் பின்பற்றுவது நன்று.<br><br>இருப்பினும், உங்கள் தேவைகளுக்கு ஏற்ப RM50,000 அல்லது RM100,000 டிடக்திபிள் கொண்ட ஏதேனும் திட்டத்தை நீங்கள் தேர்வு செய்யலாம். |
| 7. | **நான் அடிப்படை காப்பீட்டு தொகையை மாற்ற முடியுமா அல்லது சூரிச் வேல்யுலைஃப் மற்றும் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்டின் கீழ் கிடைக்கும் மற்ற விருப்பத்தேர்வு ரைடர்களைச் சேர்க்க முடியுமா?** | இல்லை, அடிப்படை காப்பீட்டுத் தொகையை மாற்ற முடியாது; மேலும் சூரிச் வேல்யுலைஃப் அல்லது சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்டிலிருந்து விருப்பத்தேர்வு ரைடர்களை இந்தப் பிரச்சாரத்தில் சேர்க்க முடியாது.<br><br>தகுதியுடையவராக இருப்பதற்கு , உங்கள் விண்ணப்பம் பிரச்சாரத் தரவுகளுக்கேற்ப இருக்க வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட தொகையில் எந்த மாற்றமும் அல்லது விருப்பத்தேர்வு ரைடர்களைச் சேர்ப்பதும் விண்ணப்பத்தைத் தகுதியற்றவையாக மாற்றும்.<br><br>இருப்பினும், கூடுதல் காப்பீட்டுப் பாதுகாப்பு தேவைப்பட்டால், உங்கள் நிதித் திட்ட ஆலோசகரைச் சந்தித்து விருப்பத்தேர்வுகளைப் பற்றி பரிசீலிக்கலாம். இதற்கு, முழுக் காப்பீட்டு மதிப்பீடு அமலபடுத்தப்படும். |
| 8. | **இந்த இரண்டாம் மருத்துவ அட்டை எவ்வாறு செயல்படுகிறது?** | உங்களின் தற்போதைய மருத்துவக் காப்பீடு முதலில் செலுத்தப்படும். தற்போதைய மருத்துவ திட்டத்தின் ஆண்டிறுதி வரம்பை அடைந்ததும் மற்றும் புதிய மருத்துவ திட்டத்தில் கழிவீடு தொகை பூர்த்தியாகியதும், சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் -இன் கடைசியாகத் தகுதி பெற்ற மருத்துவச் செலவுகளைக் காப்பீடு செய்து, உங்கள் தனிப்பட்ட செலவுகளைக் குறைப்பதோடு காப்பீட்டு இடைவெளிகளையும் குறைக்கும்.<br><br>எங்களது கோரிக்கைகள் குறித்து, பணியாற்றும் நிர்வாகி, இரு திட்டங்களையும் ஒன்றாக மதிப்பீடு செய்து,பின்பு தகுதி மற்றும் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானிப்பார். |
| 9. | **இந்த பிரச்சாரத்தில் பங்கேற்ற பிறகு, தற்போதைய மருத்துவக் காப்பீட்டை நான் தொடர வேண்டுமா?** | ஆம். இரு மருத்துவத் திட்டங்களையும் பராமரிப்பது அதிகமான பாதுகாப்பை வழங்கும். உங்களின் தற்போதைய திட்டம் முதலில் மருத்துவச் செலவுகளை காப்பீடு செய்யும்; பின்னர் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் தற்போதைய திட்டத்தில் காப்பீடு செய்யப்படாத மீதமுள்ள தகுதியான மருத்துவச் செலவுகளை, மீறக்கூடிய தொகை பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, காப்பீடு செய்யும்.<br><br>உங்கள் தற்போதைய மருத்துவக் காப்பீட்டை நிறுத்தினால், சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் காப்பீடு தொடங்குவதற்கு முன், மீறக்கூடிய தொகையைத் தனிப்பட்ட செலவாக நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும். |
| 10. | **நான் இந்த பிரச்சாரத்தில் பங்கேற்றால், என் தற்போதைய மருத்துவக் காப்பீட்டு பாதிப்புக்குள்ளாகுமா?** | இல்லை. இரு திட்டங்களும் தனித்தனியாக செயல்படும். உங்களின் தற்போதைய காப்பீடு, முன்னர் இருந்தபடியே தொடரும். |
| 11. | **எதிர்காலத்தில், என்னுடைய சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்டில் மாற்றங்கள் செய்ய முடியுமா?** | ஆம், எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்யலாம். இருப்பினும், இந்தப் பிரச்சாரத்தின் முழு நன்மைகளைப் பெற விரும்பினால், உங்களது தற்போதைய திட்டத்தை அதேபோல் பராமரிக்க நீங்கள் பரிந்துரைக்கப்படுகிறீர். பின்னர், நீங்கள் மேம்படுத்த அல்லது குறைக்க முடிவெடுத்தால், முழுமையான மருத்துவ மதிப்பீடு செய்யப்படும். |

| மருத்துவ மதிப்பீடு மற்றும் பிற தேவைகள் குறித்த கேள்வி-பதில் (FAQ) | | |
|---|---|---|
| **எண்** | **கேள்விகள்** | **பதில்கள்** |
| 12. | **காத்திருப்புக் காலம் ஏதேனும் உள்ளதா?** | இல்லை. காத்திருப்புக் காலம் விலக்கப்படும்; எனவே உங்கள் புதிய மருத்துவக் காப்பீடு உடனடியாக அமலபடுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| 13. | **நான் மருத்துவ மதிப்பீடு அல்லது உடல்நிலை தொடர்பான கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமா?** | மருத்துவ மதிப்பீடு செய்யத் தேவையில்லை. இருப்பினும், சூரிச் வேல்யுலை1ப் திட்டத்துடன் சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் ரைடரைச் சேர்க்கும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்; சில அடிப்படை உடல்நிலை குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். இந்த அடிப்படைக் கேள்விகள், பிரச்சாரத்திற்கான தகுதிக்குரிய பாதிப்பை ஏற்படுத்தாது.<br><br>விண்ணப்பிக்க, உங்கள் சலுகைக் கடிதத்துடன் இணைக்கப்பட்ட பதில் சீட்டைக் கையொப்பமிட்டு திரும்ப அனுப்ப மறக்காதீர். |
| 14. | **என் தற்போதைய திட்டத்திற்கு மருத்துவக் கூடுதல் கட்டணங்கள் அல்லது விதிவிலக்குகள் இருந்தால் என்ன செய்யவேண்டும்?** | உங்கள் தற்போதைய திட்டத்தில் உள்ள மருத்துவ கூடுதல் கட்டணங்களும் விதிவிலக்குகளும், உங்கள் புதிய மருத்துவத் திட்டத்திற்கும் பொருந்தும். தொழில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், புதிய மருத்துவத் திட்டம் உங்கள் தற்போதைய தொழிலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.<br><br>உங்கள் புதிய மருத்துவத் திட்டம் செயல்படும் தேதிக்கு முன்பு கோரிக்கை செய்யப்பட்ட எந்தவொரு நிலையும், முன்னிருந்த உடல்நிலை எனக் கருதப்படும். |
| ***மற்ற தொடர்புடைய தகவல்களின் கேள்வி-பதில் (FAQ)*** | | |
| **எண்** | **கேள்விகள்** | **பதில்கள்** |
| 15. | **புதிய மருத்துவக் காப்பீடு செயல்படுவதற்கு முன்பே நான் கோரிக்கை செய்ய முடியுமா?** | இல்லை. புதிய மருத்துவக் காப்பீடு செயல்பட ஆரம்பித்த பிறகு மட்டுமே நீங்கள் கோரிக்கைகள் செய்யலாம். அதுவரை உங்கள் தற்போதைய மருத்துவக் காப்பீட்டைப் பயன்படுத்தவும். |
| 16. | **நான் இரண்டு மாதங்களுக்கு முன்பு என் தற்போதைய மருத்துவக் காப்பீட்டில் கோரிக்கை செய்துள்ளேன். அந்தக் கோரிக்கையை பயன்படுத்தி இரண்டாவது மருத்துவத் திட்டத்தில் மீறக்கூடிய தொகையை விலக்கு செய்ய முடியுமா?** | ஆம், உங்கள் தற்போதைய மருத்துவக் காப்பீட்டின் கீழ் கோரிக்கை செய்த நிலை உங்கள் புதிய திட்டத்தில் தகுதியானதாகவும், தற்போதைய மருத்துவக் காப்பீட்டின் ஆண்டு நிறைவு நாளுக்குப் பிறகு செய்யப்பட்டது என்றால் மட்டுமே இது பொருந்தும்.<br><br>ஆண்டு நிறைவு நாளுக்கு முன்னர் செய்யப்பட்ட கோரிக்கைகள், உங்களின் இரண்டாம் மருத்துவத் திட்டத்தின் மீறக்கூடிய தொகையை விலக்கு செய்ய பயன்படாது, |
| 17. | **என் புதிய மருத்துவக் காப்பீட்டில் முன்னிருந்த உடல்நிலை குறைபாடுகள் காப்பீடு செய்யப்படுமா?** | ஆம், சில முன்பே இருக்கும் நோய்களுக்கு காப்பீடு உண்டு. நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை இதோ:<br><br>• சில நோய்கள் நிரந்தரமாக விலக்கப்பட்டுள்ளன. அவற்றுள், 49 தீவிர நோய்கள், முதுகுத்தண்டு தொடர்பான நோய்கள், நீரிழிவு தொடர்பான நோய்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் முன்பே இருக்கும் நிலையால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்படும் நோய்கள், மற்றும் உங்கள் முதல் மருத்துவ அட்டையிலிருந்து தொடரும் விலக்குகள் ஆகியவை அடங்கும்;<br>• மேலே குறிப்பிடப்பட்ட முன்பே இருக்கும் நோய்களுடன் தொடர்பில்லாத பிற நோய்களுக்கு, 3 வருட ஒத்திவைக்கப்பட்ட காப்பீட்டுக் காலத்திற்குப் பிறகு காப்பீடு வழங்கப்படும்; மற்றும்<br>• வழக்கமான பாலிசி விலக்குகள் தொடர்ந்தும் பொருந்தும். |
| 18. | **தற்போதைய மருத்துவக் காப்பீட்டிற்கு முன்பு எனக்கு ஏதேனும் மருத்துவக் குறைபாடு இருந்தால் என்ன செய்ய வேண்டும்?** | தற்போதைய மருத்துவக் காப்பீட்டிற்கு முன்பு உங்களிடம் ஏதேனும் மருத்துவக் குறைபாடு இருந்தால், அது இரு திட்டங்களுக்கும், முன்னிருந்த உடல்நிலை குறைபாடாகக் கருதப்படும். இதனால், தொடர்புடைய கோரிக்கைகள் நிராகரிக்கப்படலாம். |
| 19. | **என் தற்போதைய மருத்துவக் காப்பீடு செயல்பட தொடங்கிய பிறகு, எனக்கு எதாவது மருத்துவக் குறைபாடு ஏற்பட்டால், அது என் கோரிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா?** | இல்லை. ஒவ்வொரு திட்டமும் முன்னிருந்த உடல்நிலை குறைபாடுகளைத் தனித்தனியாக மதிப்பீடு செய்யும்.<br><br>ஏதேனும் மாற்றங்கள், உங்கள் தற்போதைய மருத்துவக் காப்பீடு செயல்படத் தொடங்கிய பிறகு ஏற்பட்டால், தற்போதைய திட்டத்தின் காப்பீடு தொடரும்.<br><br>இருப்பினும், உங்கள் புதிய மருத்துவத் திட்டத்தில் ,அந்நிலை முன்னிருந்த உடல்நிலை என்றே கருதப்படும். இந்நிலைக்கான காப்பீடு, 3 ஆண்டு காத்திருப்பு காலத்துக்குப் பிறகுதான் அமலப்படுத்தப்படும்; அல்லது விதிவிலக்குகள் |

| | | |
|---|---|---|
| | | அனுமதிக்கப்படும்.<br><br>முழுமையான விவரங்களுக்கு, உங்களின் நிதித் திட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும். |
| 20. | **என்னுடைய சூரிச் இன்ஃபினிட்கேர் ஷீல்ட் எதிர்காலத்தில் காலாவதியானால், அதனை அதே பிரச்சார நிபந்தனைகளுடன் மீண்டும் செயல்படுத்த முடியுமா?** | ஆம், பாலிசியை (அடிப்படைத் திட்டத்தைச் சேர்த்து) காலாவதியான நாளில் இருந்து ஓர் ஆண்டுக்குள் மீண்டும் செயல்படுத்தினால் மட்டும் அது சாத்தியம். முன்னிருந்த உடல்நிலை குறைபாடுகளுக்கு மீண்டும் காத்திருப்புக் காலம் அல்லது விதிவிலக்குகள் பொருந்தக்கூடும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.<br><br>முழுமையான விவரங்கள் மற்றும் தனிப்பட்ட வழிகாட்டலுக்கு, தங்களின் நிதித் திட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும். |
| 21. | **மேலும் தகவல் தெரிந்து கொள்ள நான் யாரைத் தொடர்பு கொள்ளலாம்?** | மேலும் உதவி தேவையெனில்:<br>• எங்கள் வாடிக்கையாளர் சேவை உதவி எண், 1-300-888-622-க்குத் தொடர்பு கொள்ளவும்;<br>• அல்லது callcentre@zurich.com.my என்ற மின்னஞ்சல் முகவரியில் மின்னஞ்சல் அனுப்பவும்;<br>• இல்லையெனில், உங்கள் நிதி திட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளலாம்;<br>• அல்லது அருகிலுள்ள மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவனத்தின் கிளைகளுக்குச் செல்லவும். |